**செய்தி வெளியீடு எண்: 841.** **நாள் :<u>29–9–2010</u>**

செய்திக்குறிப்பு

தென்னை விவசாயிகள் நல வாரியத்தின் முதல் கூட்டம்

தென்னை விவசாயிகள் நல வாரியத்தின் முதல் கூட்டம் 29.9.2010 அன்று காலை 11.00 மணியளவில் தோட்டக்கலை துறை இயக்குநரகம், சென்னை அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் வருகைபுரிந்தார். இவ்வாரியத்தின் தலைவர், திரு இராஜ்குமார் மன்றாடியார், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர். சந்திரமோகன். இ.ஆ.ப, இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, அவர்கள் இவ்வாரியத்தின் உறுப்பினர்களை வரவேற்று கூட்டத்தின் நிகழ்வுகள் குறித்து உறுப்பினர்களுக்கு கூறினார். உறுப்பினர்கள் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்ட பின், சில அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் இவ்வாரியத்தின் செயல்பாடுகள் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டனர்.

தமிழக அரசின் சீரிய முயற்சியினால் அமைக்கப்பட்ட இவ்வாரியம் தென்னை விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு, உற்பத்தி உயர்வு, புதிய தொழில் நுட்பம் அறிமுகம், சந்தை படுத்துதல், கொப்பரை கொள்முதல், உரித்த தேங்காய் கொள்முதல் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். இக்கூட்டத்தில் தென்னை விவசாயிகள் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான தகுதியை நிர்ணயம் செய்தல், வாரியத்தினால் செயல்படுத்தப்படவுள்ள நலத்திட்டங்கள், தென்னை விவசாயம் பற்றி வாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் வாரிய நிர்வாகத்திற்கு தேவைப்படும் ஏற்பாடுகள் செய்வது, போன்ற பொருட்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், திரு பா. இராமமோகன் ராவ், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை அரசு செயலர், வேளாண்மைத்துறை, முனைவர் மு. முருகேச பூபதி, துணை வேந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், திரு எஸ்.கோசலராமன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை ஆணையர், திரு அதுல் ஆனந்த், இ.ஆ.ப., வேளாண்மை விற்பனைத்துறை ஆணையர், மருத்துவர் பி.சந்திரமோகன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை இயக்குநர், திரு அ.சங்கரலிங்கம், தனி அலுவலர், டான்பெட், திரு ராஜமாணிக்கம், தலைவர் மற்றும் பேராசிரியர், தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார், மற்றும் திரு ஹேமச்சந்தர், மண்டல இயக்குநர், தென்னை வளர்ச்சி வாரியம், தென்னை ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அலுவல் சாரா உறுப்பினர்கள் உரித்த தேங்காய் கொள்முதல், கொப்பரை கொள்முதல், தென்னை பொருட்களின் ஏற்றுமதி, சொட்டு நீர் பாசனம், உயர் விளைச்சல் தரும் ரகங்கள் ஆகிய பொருட்களில் இவ்வாரியம் அதிக பங்களிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

இறுதி உரை நிகழ்த்திய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் , அதிக இலாபம் பெற வேளாண்மையை தொழில் ரீதியில் நடத்தவேண்டுமென்றும், கொப்பரை மற்றும் உரித்த தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு கொள்முதல் விலையை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டு, நாபெட் நிறுவனமானது, இக்கொள்முதலை தமிழகத்தில் உள்ள டான்பெட் நிறுவனத்தை முகவராக நியமித்து கொள்முதலை மேற்கொண்டுவருகிறது என்றும் தெரிவித்தார். கொப்பரை தயாரிப்பில் உள்ள இடர்பாடுகளை நீக்க, உடனடியாக, பத்து உலர்கலன்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்தார்.

நிறைவாக, திரு அ..இராமமூர்த்தி, கூடுதல் தோட்டக்கலை இயக்குநர் அவர்கள் கூட்டத்தின் கலந்துகொண்டோர்க்கு நன்றி கூறினார்.

*****************************************************************************************

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**